# யூலை – 25 – புதன்

### திருத்தூதர் யாகப்பர்

### ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்: திபா. 126:3

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர்4 : 7 – 15

சகோதர சகோதரிகளே கடவுளின மாட்சியாகிய இந்தச் செல்வத்தை மண்பாண்டங்கள் போன்ற நாங்கள் கொண்டிருக்கிறோம். இந்த ஈடு இணையற்ற வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை, அது கடவுளுக்குகே உரியது என்பது இதிலிருந்து விளங்குகிறது.நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்குசென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்துசெல்கிறோம். இயேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் உடலில் வெளிப்படுமாறு உயிரோடிருக்கும்போதே நாங்கள் அவரை முன்னிட்டு எந்நேரமும் சாவின்வாயிலில் நின்றுகொண்டிருக்கிறோம்.சாவின் ஆற்றல் எங்களிலும் வாழ்வின் ஆற்றல் உங்களிலும் வெளிப்படுகிறது. ”நான் கடவுள்மீது நம்பிக்கையோடு இருந்தேன். ஆகவே பேசினேன்” என்று மறைநூலில் எழுதியுள்ளது. அதற்கொப்ப நம்பிக்கை மனப்பான்மைகொண்டுள்ள நாங்களும் நம்புகிறோம் ஆகவே பேசுகிறோம். ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச்செய்த கடவுளே எங்களையும் அவரோடு உயிர்த்தெழச்செய்து அவர் திருமுன்நிறுத்துவார் உங்களையும் அவ்வாறே நிறுத்துவார் என்பது எங்களுக்குத்தெரியும்.இவையனைத்தும் உங்கள் நன்மைக்கே நிகழ்கின்றன. இறையருள் பெறுவோரின் தொகை பெருகப்பெருக அவர்கள் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியும் பெருகும். இதனால் கடவுள் போற்றிப் புகழப்படுவார்.

**பதில்பாடல் :** கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு

## நற்செய்தி : மத்தேயு 20 : 20 – 28

அக்காலத்தில் செபதேயுவின் மனைவி தம்மக்களோடு ஒரு வேண்டுகோள் விடுக்குமாறு இயேசுவிடம் வந்து பணிந்து நின்றார். ”உமக்கு என்னவேண்டும்?” என்று இயேசு அவரிடம் கேட்டார். அவர், ”நீர் ஆட்சிபுரியும்போது என்மக்களாகிய இவர்கள் இருவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச்செய்யும்” என்றுவேண்டினார். அதற்கு இயேசு, ”நீங்கள் என்னகேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கப்போகும் துன்பக்கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?” என்றுகேட்டார். அவர்கள் ”எங்களால் இயலும்” என்றார்கள். அவர் அவர்களைநோக்கி, ”ஆம், என்கிண்ணத்தில் நீங்கள்குடிப்பீர்கள். ஆனால் என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவதோ எனது செயல் அல்ல. மாறாக அவ்விடங்களை என்தந்தை யாருக்கு ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அவை அருளப்படும்” என்றார்.இதைக் கேட்டுக்கொண்டிருந்த பத்துப்பேரும் அச்சகோதரர் இருவர்மீதும் கோபங்கொண்டனர். இயேசு அவர்களை வரவழைத்து, ”பிறஇனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடிமக்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள் இதை நீங்கள் அறிவீர்கள். உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் பெரியவராக இருக்கு விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்கவிரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிடமகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” என்று கூறினார்.

**தியானம்:** ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற நிகழ்வுகள் தான் அவனது வாழ்க்கைக்கு பாடமாக அமைகின்றது. வழக்கமாக கண்ணீர் என்பது வருத்தத்தை வெளிப்படுத்தும் அடையாளமாக இருக்கின்றது. சிலசமயங்களில் ஆனத்தத்தின் அடையாளமாகவும் அமைகின்றது. இங்கே கண்ணீர் எனப்படுவது அடிமைத்தனத்தின் கோரத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. இது செய்த தவறினால் ஏற்பட்ட நிலை அல்ல. மாறாக அதிகாரவர்க்கத்தினரின் சுயநலத்தால் ஏறபட்டது. அதனால் விளைந்த துன்பம் தான் இந்த கண்ணீர். இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்த போது நிச்சயமாக பலவிதமான இன்னல்களை அனுபவித்திருப்பார்கள். வேற்று நாடுகளில் அடிமைகளாக உணவுக்கும், தண்ணீருக்கும் வழியில்லாதவர்களாக, மற்றவர்களிடம் கையேந்துபவர்களாக, வாழ்வது என்பது எவ்வளவு கடினமான செயலாக இருக்கும் தங்களைப் பற்றி ஒரு கழிவிரக்கத்தை கொடுக்கக் கூடிய ஒருவகையான மோசமான நிலை. அந்த நிலையிலிருக்கக் கூடியவர்களின் நிலை தான் இங்கே கண்ணீராக குறிப்பிடப்படுகின்றது. அந்த நிலையில் இருக்கிறவர்களை கடவுள் ஒரு போதும் கை விடமாட்டார் என்பது இங்கு நமக்கு தரப்படுகின்ற செய்தி. அது மட்டுமல்ல அந்த கண்ணீரையே கடவுள் மகிழ்ச்சியாக மாற்றுவார் என்பதை நாமும் உணர்ந்து வாழ்வோம் ஆமென்.